**அநுராதபுர மாநகர சபை**
**அநுராதபுர மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 01 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜூன் 16 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 திகதி மாநகர சபையின் மாநகர ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அநுராதபுர மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் கடை வாடகை பதிவேட்டின் பிரகாரம் வருடாந்த குத்தகை வாடகை ரூபா 19,288,309 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 25,234,179 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 9,344,384 தொகையான 16 வாகனங்கள் சபையிடம் இல்லாதிருந்தமை காரணமாக நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மூலம் பிளிசரு செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 7,600,000 கூட்டுத்தொகையான 02 வாகனங்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக அநுராதபுர மாநகர சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 131,050,243 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 50,146,300 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 ஆதன வரி

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதன வரி ரூபா 78,550,122 தொகையை 1947 இன் 16 ஆம் இலக்க மாநகர கட்டளைச் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கடை வாடகை**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 42,819,703 ஐ உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 ஏனைய வருமானம்**

சபைக்குச் சொந்தமான 39 ஏக்கர் மற்றும் 72 பேர்ச் வயல் காணி வெளித்தரப்பினரால் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்துவது கண்டறியப்பட்டதுடன், அவ்வயல் காணிகளை இனங்கண்டு விளைச்சல் வரியை அறவிடுவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) நாளாந்த நடவடிக்கைகளுக்காக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற 07 வாகனங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2001 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 876,926 தொகையான 59 மதிப்பிழந்த காசோலைகளுக்குரிய பணத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 10 ஆண்டுகளுக்குரிய ரூபா 2,778,162 தொகையான கணக்காய்வுக் கட்டணங்களை 2016 மே 27 ஆந் திகதி வரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாநகர சபைக்குரிய சில காணிகள் / கட்டிடங்கள் இனங்காணப்பட்டு அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிலையான சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) பொது வைப்புக் கணக்கில் காணப்படும் ரூபா 8,638,381 தொகையான இரண்டு வருடங்களை மிகைத்திருந்த வைப்புக்களை இனங்கண்டு வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2002 நவம்பர் 28 திகதி ஐஏஐ/2002/02 கொண்ட திறைச்சேரி சுற்று நிருபத்தின் பிரகாரம் சபையில் காணப்படும் ரூபா 5,815,880 தொகையான கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக புறம்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2. சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற சொத்துக்கள்**

(அ) நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 4,130,000 கூட்டுத்தொகையான 03 வாகனங்கள் மீளாய்வாண்டில் உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் பெறுமதி உட்பட விபரங்கள் குறிப்பிடப்படாதிருந்த 05 வாகனங்கள் உரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

(அ) மஹாநாம உயன 8 ஆவது ஒழுங்கையின் இறுதிப் பகுதியின் 307 மீற்றர் பகுதிக்கு கற்களைப் பரப்பி தார் ஊற்றுவதற்கு ரூபா 1,094,790 தொகை 2015 செப்தெம்பர் மாதம் செலவிடப்பட்டிருந்தது. 2016 மே 20 ஆந் தகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையின் போது கற்களை இட்டு தார் ஊற்றப்பட்டிருந்த பகுதியின் கூடுதலான பகுதியில் வீதியில் கோடுகள் விழுந்து கற்கள் கலன்று வீதி கீழறங்கியிருந்தது. அந்நிலைமையில் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் உரிய நியமத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படாதருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே வேலை விடய இலக்கம் 3.1 மற்றும் 3.2 இன் கீழ் வீதியின் ஓரத்தை தயார்படுத்துவதற்காக 26.99 கன மீற்றர் சரளைக் கற்களை வீதியின் இரண்டு பக்கங்களிலும் இடுவதற்கு ரூபா 47,826 செலுத்தப்பட்டிருந்த போதிலும், குறித்த செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பண்டுகாபயபுர 8 ஆவது ஒழுங்கையின் 389 மீற்றர்களுக்கு கற்களைப் பரப்பி தார் ஊற்றுவதற்கு ரூபா 1,616,699 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வெளிக்களப் பரிசோதனையின் போது பெற்றுக்கொண்ட அளவீடுகளின் பிரகாரம் கற்களைப் பரப்பி 373 மீற்றரிற்கு தார் ஊற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தார் இடப்படாத 16 மீற்றருக்காக ரூபா 57,162 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. உரிய தரம் மற்றும் மேற்பார்வையொன்று இல்லாமல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் தார் ஊற்றப்பட்டிருந்த பகுதியின் பெரிய பகுதியொன்று கோடுகள் விழுந்து வீதி கீழிறங்கி கற்கள் கலறுவதற்கு அண்மித்த நிலைமையில் இருந்தமை 2016 மே 20 ஆந் திகதிய பௌதீக பரசோதனையின் போது கண்டறியப்பட்டது.

(இ) ரத்னாயக்கபுர II ஆவது ஒழுங்கையின் இறுதிப் பகுதியின் 128 மீற்றருக்கு தார் ஊற்றி அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 1,279,510 தொகை 2016 பெப்ரவரி மாதத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2016 மே 20 ஆந் திகதி மேறகொண்ட வெளிக்களப் பரிசோதனையின் போது ரூபா 142,536 ஆன மிகைக் கொடுப்பனவொன்று இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்